
# பார்ப்பவன் - பார்க்கப்படும் அறிவு!

## (திருக் - திருஷ்ய விவேகம்)



ப்ரக்ஞன்

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| **நூலின் பெயர்** | : | பார்ப்பவன் – பார்க்கப்படும் அறிவு |
| **தெளிவுரை** | : | ப்ரக்ஞன் [Prajnan] |
| **வகை** | : | உபதேசம் |
| **முதற்பதிப்பு** | : | 2020 |
| **வெளியீடு** | : | பராபரம் |
| **பக்கங்கள்** | : | 34 |
| **விலை** | : | அக விழிப்பு |

| | | |
|---|---|---|
| **பதிப்பாளர்** | : | ஓம் கிராபிக்ஸ் |
| | | கோயமுத்தூர். |

# பார்ப்பவன்

# பார்க்கப்படும் அறிவு!

## (திருக் – திருஷ்ய விவேகம்)

தெளிவுரை

## ப்ரக்ஞன்

# பார்ப்பவன் - பார்க்கப்படும் அறிவு!

## (திருக் - திருஷ்ய விவேகம்)

திருக் – **பார்ப்பவன்**

திருஷ்யம் – **பார்க்கப்படும் பொருள்**

இந்த திருக் – திருஷ்ய விவேகம் பற்றி பகவான் ஸ்ரீசங்கரர் கூற வருவது என்னவெனில், நாம் காணும் இந்த பிரபஞ்சம் **திருஷ்யம்** என்றும், காண்பவனாகிய '**நான்**' என்பவன் **திருக்** என்றும் கூறி, இதைப்பற்றிய ஒரு விளக்கத்தையே, "**திருக், திருஷ்ய விவேகம்**" என எடுத்துக்கூறுகிறார்.

இதிலே, இவர் கூறவருவது இரண்டற்ற ப்ரஹ்மம் ஒன்று மட்டுமே உள்ளது என்ற அத்வைத சித்தாந்தத்தின்படி, ஒன்றேயான அந்த **ப்ரஹ்மம்** நமக்குத் தெரியாமல், அதற்கு பதிலாக இந்த **பிரபஞ்சம்** நமக்குத் தெரிவதற்குக் காரணம் என்ன...? என்பது எல்லோருக்கும் எழுகின்ற சந்தேகம் ஆகும்.

இதற்கு, ஆதிசங்கரர் இந்த பிரபஞ்ச படைப்புக்கு மிக முக்கியமான விஷயங்கள் இரண்டு உள்ளன. அவைகளை,

அனாதியான அந்த ப்ரஹ்மத்தின் வெளிப்பாடாக **ஆவரணம் - விக்ஷேபம்** என்ற இரண்டு சக்திகளாக கூறுகிறார்.

அந்த சக்திகள் **ஒளி - இருள்** என்ற இரு பிரிவுகளாகப் பிரிந்து, அதில் **ஆவரணம்** என்ற மறைக்கும் சக்தி, **விக்ஷேபம்** என்ற தோன்றும் சக்தி என இருமைகளில் இரண்டு சக்திகள் ப்ரஹ்மத்திடமிருந்து வெளிப்பட்டன.

அதிலே, இந்த படைப்புக்கு அதாரமான, ஒன்றேயான ப்ரஹ்மம் **'பரமான்மா'** என்றும், அதன் சக்தியாகப் படைக்கப் பட்டவைகள் அனைத்தும் **'அனாத்மாக்கள்'** (ஜீவான்மாக்கள்) என்றும் கூறப்படுகின்றன.

இங்கு படைப்பு என்பதும், படைக்கப்பட்டவைகள் என்பதும் எங்கிருந்து உண்டானது என்பதை உற்று கவனித்தால், அந்த ஒன்றேயான ப்ரஹ்மம் (அறிவு) ஒன்றே பலவற்றையும் படைக்கின்றது என்பதையும் அறிய முடிகிறது.

இதைப்பற்றி பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் தமது பகவத் கீதையில் கூறும் போது, **க்ஷேத்திரம் - க்ஷேத்திரஞ்சன்** என்று கூறுகிறார்.

அதாவது, க்ஷேத்திரம் என்பதை **'தேகம்'** என்றும், க்ஷேத்திரஞ்ஞன் என்பதை **'தேகி'** என்றும் கூறப்படுகிறது. அதாவது, தேகம் என்பது படைக்கப்பட்டவைகள், தேகி என்பது படைப்பவன் என்று பொருள்.

போகத்திற்கு உரியதான இந்தத் தேகம் க்ஷேத்ரம் என்று கூறப்படுகிறது. இந்த தேகத்தில் இருந்து கொண்டே எவன் தேகத்தை அன்னியமாக உணர்வானோ, அவன் **தேகி** ஆகிய **ஆன்மா** எனப்படுவான். அதனைத் தமது அனுபவத்தில் உணர்ந்த தத்துவ ஞானிகள் அந்த ஆன்மாவை க்ஷேத்ரஞ்ஞன் என்று கூறுகிறார்கள்.

க்ஷேத்ரம் என்றால், **விளைநிலம்** என்று ஒரு பொருளும் உண்டு.

அந்த விளைநிலத்தில் விதையிலிருந்துதான் தாவரங்கள் முளைக்கின்றன என்றாலும் அவைகள், நன்கு செழித்து வளர வேண்டுமானால், அதற்கு விளைநிலம் அவசியம் இருந்தாக வேண்டும்.

அதுப்போல, ஆன்மாவாகிய **க்ஷேத்ரஞ்ஞன்** என்பதின் சுய அறிவு எண்ணங்களாக பிரகாசித்து, அதன் வாயிலாக செயலாகப் பரிணமிக்க, அதற்குத் தேகம் என்ற **க்ஷேத்ரம்** இருந்தாக வேண்டும்.

ஆக தேகம் (உடல்) என்பதை விளைநிலம் என்று கொள்கிறோம். அந்த நிலத்தில் நமது எண்ணங்களாகிய விதைகளுக்கு ஏற்ப, கிளைத்து எழுவதே இங்கு செய்யும் செயல்கள் எனப்படுகிறது.

அந்த செயல்களினால் உண்டான அனுபவங்கள் அனைவருக்கும் ஏற்பட ஒரு தேகம் வேண்டும். அதன் மூலம் தான் ஒருவன் தனது எண்ணங்களின் விளைவுகளை மேலும் கற்றுத் தெளிய முடியும்.

அந்தத் தேகத்தை எவன் செயல்களின் விளை நிலமாக உணர்கிறானோ அவன் **க்ஷேத்ரஞ்ஞன்** எனப்படுகிறான்.

அதாவது, **க்ஷேத்ரம்** என்ற தேகம் ஒன்று உள்ளது என்பதை உணரும் **க்ஷேத்ரஞ்ஞன்** தான் தேகி (ஆன்மா) எனப்படுகிறது.

ஆக தேகம் வேறு, ஆன்மா வேறு என்று பகுத்தறிவது எதுவோ, அதைத்தான் "**பகுத்தறிவு**" எனப்படுகிறது. இந்த பகுத்தறிவு பிரத்யேகமாக மனிதனிடம் மட்டுமே உள்ளது.

அதன் அடிப்படையில், **க்ஷேத்திரங்கள்** (உடல்கள்) என்று சொல்லப்படும் எல்லா சரீரங்களின் உள்ளும், அவைகளோடு சேர்ந்தே உறைகின்ற க்ஷேத்திரஞ்ஞனான அறிவாகிய ஆன்மாவாகத் தன்னை எவன் ஒருவன் அறிகிறானோ அவனே "**ஞானி**" என்றும் அழைக்கப்படுகிறது.

க்ஷேத்திரமாகிய தேகம் ஆன்மாவின் (**க்ஷேத்ரஞ்ஞன்**) இருப்பிடம்.

அதனாலேயே இறைவன் கோவில் கொண்டுள்ள இடத்தை **க்ஷேத்திரம்** என்று குறிப்பிடுகிறோம். எந்த ஒரு க்ஷேத்திரமும் ஒரு புனிதத்தலமாகக் கருதப்பட வேண்டும்.

க்ஷேத்திரத்தில் இருப்பதால் இறைவன் **க்ஷேத்திராதிபதி** எனப்படுகிறான்.

எங்கும் உள்ள நிர்குண இறைவனை - எவருள்ளும் உறையும் தூய ஆன்மாவை - சகுண இறைவனாக உருவத்தில் வைத்து கோவில்களில் வழிபடுகிறோம்.

**க்ஷேத்திரம்** என்பதை இடம் அல்லது வீடு என்றும் சொல்வார்கள். எப்படி வீட்டில் இருப்பவன் தன்னை வீட்டுக்காரன் என்பதையும், வீடே வீட்டுக்காரன் ஆக முடியாது என்பதையும் நன்கு உணர்வானோ, அப்படியே ஒரு உடலில் தான் இருக்கிறேன் என்பதையும், அந்தத் தான் யார்? என்பதை அறிய வேண்டும் என்பதையும் ஒரு அறிவாளி மட்டுமே உணர்வான்.

அப்படி பகுத்துப்பார்த்து க்ஷேத்திரன், க்ஷேத்திரஞ்ஞன் தன்மையை அறியக் கூடிய ஞானமே '**ஆன்ம ஞானம்**' என்றும் கூறப்படுகிறது.

இந்த க்ஷேத்திரத்தில் க்ஷேத்திரஞ்ஞனாக இருப்பவனே பிரபஞ்சத்தில் எங்கும், சர - **அ**சர உயிர்கள் அனைத்திலும் பரவியுள்ள அறிவு சொரூபமாக இருக்கிறான் என்பதைக் கொண்டு, இதிலே "**நான்**" என்னும் எண்ணம் நமது உடலை அபினாமாகக் கொண்டது, அதுவே, "**நான்-நான்**" என்னும் நம்முள் இயல்பாக வெலிப்படும் உணர்வு என்பது உடலைக் கடந்த அறிவின் உண்மை நிலை என்றும் புரிந்துக் கொள்ள வேண்டும்.

இதில் "**நான்**" என்பதை நாம் பொதுவாக, நமது விழிப்பு நிலையில் அனுபவிப்போம். நமது அகந்தையான அனுபவங்களும் அதனுடன் தொடர்பு கொண்டதுதான். அதுதான் நம்மை படாதபாடு படுத்துகிறது.

அதுவே, பின்னதாகிய "**நான்-நான்**" என்னும் உணர்வு நம்முடன் எந்த நிலையிலும், எப்பொழுதும் இருப்பது. அந்த "**நான்-நான்**" என்ற அந்த உள்ளுணர்வைப் பிடித்துக் கொண்டு எப்போதும் இருக்கப் பழகுங்கள், அதுதான் உங்கள் உண்மையான சொரூபம் என்றும், அதுவே உங்களைச் சுற்றியுள்ள அனைத்து சீவராசிகளின் உண்மையான சொரூபம் என்றும் காலப் போக்கில் உணர்வீர்கள்.

அதுதான் **க்ஷேத்திரஞ்ஞன்** என்று கூறப்படும் ஆன்ம சொரூபம் என்று சொல்லலாம். அதற்கு எல்லை இல்லை, காலமோ, தேசமோ எதுவும் இல்லை. சுருங்கச் சொன்னால் அது ஒன்றுதான் இருப்பது. அதை ஒருவன் உணர வேண்டுமானால், அதற்கான அனுபவமாக அவனுக்கு உடல் தேவைப்படுகிறது.

அதாவது, விதைகளை (எண்ணங்களை) விதைக்க, விளைநிலம் (உடல்) தேவைப்படுகிறது. ஆக, விளைநிலம் இல்லாமல், விதைகளையும் விதைக்காமல், அதன் அனுபவங்களாக வெளிப்படும், பல்வேறு தாவர உணவுகளை எவ்வாறு பெற முடியாதோ?, அவ்வாறே, உடல் இல்லாமல் உணர்வு என்ற ஆன்ம அறிவின் அனுபவம் உண்டாகாது.

இதைத்தான், பகவான் ஸ்ரீஆதிசங்கரர் "**திருக் - திருஷ்ய விவேகம்**" என்று எடுத்துரைக்கிறார்.

பகவான் ஸ்ரீ சங்கரர் உண்மையில் என்ன கூற வந்தாரோ?, அதைப்பற்றிய சரியான புரிதல் இல்லாமல், எல்லோருமே ஏற்றி வைக்கப்பட்ட ஏராளமான எண்ணங்களின் அடைப்படையில் அவரவர்களுக்குத் தோன்றியதை எடுத்துக் கூறுகிறார்கள்.

பகவான் ஸ்ரீ சங்கரர் கூறவருவது, '**இருப்பது ஒன்றே, அதுவே ஆன்மா**' என்றும், அந்த ஆன்மாவிற்கு அனேக பெயர்களைக் கூறி, அதை **ப்ரஹ்மம், சிவம், அறிவு, உயிர், உணர்வு,** மற்றும் "**த்ருக்**" என்றும் பல பெயர்களில் அழைக்கப்படுகிறது என்றும் கூறுகிறார்.

அந்த "**த்ருக்**" என்பது **பார்ப்பவன்** என்றும், '**திருஷ்யம்**' என்பது, அதனால் **பார்க்கப்படும் பொருள்கள்** என்றும் கூறுகின்றார்.

அவ்வாறு, **பார்ப்பவன் - பார்க்கப்படும் பொருள்கள்** என இரண்டு இருப்பின், ஒன்றேயாகிய அந்த ஆன்மாவிற்கு வேறாக மற்றவைகள் எங்கிருந்து வந்தது…? என்ற கேள்வி எழுவதும் இயல்பு.

இங்கு கூறவருகின்ற ஆழமான கருத்து என்னவெனில், ஒன்றேயாகிய **பார்ப்பவன்,** தன்னுடைய சுய அறிவினாலே, பார்க்கப்படும் பொருள்களை படைத்துக்கொள்கிறான்.

அவ்வாறு பார்ப்பவனால் படைக்கப்பட்டவைகள், பார்வையாளனுக்கு வேறாக உள்ளனவா? அல்லது பார்வையாளனாகவே உள்ளனவா? என்பதை ஆராய்வதே, இந்த "**திருக் - திருஷ்ய விவேகம்**" எனப்படுகிறது.

இங்கு பார்வையாளன் ஒருவன் இருக்கிறான். அவனால் படைக்கப்பட்டவைகள் பலவாறாக இருக்கின்றன எனும்போது, அவ்வாறு படைக்கப்பட்டவைகள் பார்வையாளனுக்கு வேறாகத்தான் இருக்க முடியுமே தவிர, அவைகள் பார்வையாளனாக ஆக முடியாது என்பது எல்லோருக்கும் ஏற்புடையது எனலாம்.

அதாவது, வீட்டில் இருப்பவனும், வீடும் ஒன்றாக முடியாது.

ஆனால், பார்வையாளனே, படைக்கப்பட்ட வைகளாகவும் இருக்கிறான் என்றால், ஒரு வீட்டில் உள்ளவனே, அந்த வீடாகவும் இருக்கிறான் என்றால் ஏற்றுக் கொள்ள முடியாது அல்லவா...?

அப்படியிருக்க, படைப்பாளியே படைக்கப்பட்டவை களாகவும் இருக்கிறான் என்று இங்கு கூற வருவதே **திருக் - திருஷ்ய விவேகம்** எனப்படுகிறது.

**அது எப்படி...!?**

அதாவது, பார்வையாளனாகிய **ஆன்மா** ஒன்றே உள்ளது. அது மட்டுமே "**சத்தியம்**".

அதனால், அதன்மூலம் படைக்கப்பட்டவைகளான இந்த பிரபஞ்சம் வந்து போகின்றது என்பதினால், அவைகள் “**மித்யா**” என்றும் கூறப்படுகிறது.

இந்த “**மித்யா**” என்ற வார்த்தையில் உண்டான குழப்பத்தினால், அவரவர்களுக்குத் தெரிந்ததை வைத்துக் கொண்டு, ஏராளமான எண்ணங்களின் அடிப்படையில் அந்த வார்த்தைக்கு பொருள் கூறும் பொழுது, அதை பலவாறாக பொருள் கூறியுள்ளனர்.

அதாவது, “**மித்யா**” என்றால், ‘**நிலையற்றது**’, ‘**வந்து போவது**’, ‘**இருப்பது போல உள்ளது, ஆனால் உண்மையில் இல்லை**’, ‘**மாயை**’, மற்றும் ‘**பொய்**’ என்று பலவாறாகக் கூறியுள்ளனர்.

இதில், **மாயை என்பது என்ன?**

அதாவது, மாயத்தோற்றம் என்பது, இல்லாததை இருப்பதாக நினைத்து மயங்குவது எனலாம்.

# மாயைப்பற்றி மாயாவாதிகள் கருத்து

நாம் காணும் இந்தப்பிரபஞ்சம் முழுவதும் பிரம்மமே. பிரம்மத்தைத் தவிர இரண்டாவதாக ஒன்றில்லை என்கிறது.

மனிதர்கள், மரங்கள், விலங்குகள், புல் பூண்டுகள், அத்துடன் அண்ட சராசரங்கள் ஆகிய "**அனைத்தும் பிரம்மமே**" என்கிறது அத்வைதம்.

அப்படியானால், நாம் காணும் இந்தப் பொருள்கள் எல்லாம் என்ன?

இந்த பூமியில் வெவ்வேறு மனிதர்கள், பல்வேறு உயிரினங்கள் அவைகளின் உடல்கள், அத்துடன் இந்த பூமிப் பந்துக்கு அப்பாற்பட்ட அண்ட சராசரத்தில் சூரியன், சந்திரன், பிற கிரகங்கள் ஆகியவைகள் எல்லாம் என்ன?

எல்லாம் "**மாயை**" என்கிறது மாயாவாதம்.

"**பிரம்ம சத்யம் ஜகன் மித்யா**'; **ஜீவோ பிரம்மைவ நாபர**:"

என்னும் பிரபலமான சொற்றொடரை வைத்து, இதை நிலைநிறுத்த முயற்சிக்கிறார்கள் மாயாவாதிகள்.

## மாயாவாதம்

அறிவதெல்லாம் மாயையே என்று சொல்லும் தத்துவக் கோட்பாடுதான் மாயாவாதம். இந்த மாயாவாதம் மூன்று தளங்களைக் கொண்டது.

1] மனிதன் அறிவது முழுமையான உண்மையை அல்ல. அவனது அறிவுக்கு அப்பால், அவனறியாத அல்லது அறிய முடியாத ஒன்று உள்ளது. அதன் சில தளங்களையே அவன் அறிகிறான். [பண்டைய வேதாந்தம்].

2] மனிதனின் அறிவு தன்னளவில் உண்மையை குறைப்படுத்தி மட்டுமே அறியும் இயல்பு கொண்டது. ஆகவே அவன் தன் அறிவால் உணரக்கூடியதெல்லாமே அவனால் திரிக்கப்பட்ட உண்மையையே. [பிற்கால பௌத்த மதம்].

3] மனிதன் அறிவதெல்லாம் அவனது மன மயக்கமே. அவன் அறிவதற்கு அப்பால் உள்ள முழுமுதல் உண்மையின் மாயத்தோற்றமே அவனது அனைத்து அறிதல்கள். [அத்வைத வேதாந்தம்].

**மாயாவாதம்** என்பது, எல்லா சிந்தனைகள் மரபுகளிலும், ஏதோ ஒருவகையில் ஆதிகாலம் முதற்கொண்டே உள்ளது.

ரிக் வேதத்தில் மாயாவாதத்தின் அடிப்படையை அமைக்கக்கூடிய சிந்தனைகள் நிறையவே உள்ளன.

அதில், நாம் இந்த பிரபஞ்சமாகக் காணும் இந்த பன்மைத் தோற்றமானது, இதற்கு அப்பாற்பட்ட ஓர் ஒருமையின் வெளிப்பாடு அல்லது தோற்றநிலையே என **ரிக்வேதம்** மீண்டும், மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறது.

'பல இடங்களிலும் எரியும் அக்கினி ஒன்றே. எங்கும் ஒளிரும் சூரியனும் ஒன்றே. அவைகள் அனைத்தையும் வெளிப்படுத்தும் அறிவும் ஒன்றே' அந்த ஒன்றே இவைகளெல்லாம். [ரிக் வேதம்].

உபநிடதங்களில் இத்தரிசனம் வளர்ச்சி அடைந்து. '**அதுவே நீ**!' '[சாந்தோக்ய உபநிடதம்] என்று கூறும் புகழ் பெற்ற மகா வாக்கியம் இதை எடுத்து உபதேசிக்கிறது.

இதிலே, ஆன்மாவிற்கு '**அப்பால் உள்ள ஒன்று**' என்ற பார்வை வலுப்படும்போது மட்டுமே, அந்த ஒன்றேயானது எப்படி இந்த பிரபஞ்சமாகத் தோற்றம் கொண்டது என்ற கோணமும், அதற்கான தேடுதலும் உண்டானது.

உபநிடதக் கருத்துக்களை தொகுத்து வேதாந்தம் என்ற அமைப்பை உருவாக்கிய **பாதராயணர்** என்ற ரிஷி தமது பிரம்ம சூத்திரம் என்ற நூல்களில் இப்பார்வையை மேலும் வளர்த்தெடுத்தார்.

படைக்கப்பட்ட இந்த இயற்கை என்பது, பிரஹ்மமே [பிரம்ம சூத்திரம்] என்பது அவரது கூற்று.

பிரஹ்மத்திலிருந்து பிறந்து, அதே பிரஹ்மத்தில் மறையும் ஒன்றுதான் இந்த பிரபஞ்சம்.

பிரம்மமே இந்த பிரபஞ்சமாக அல்லது இயற்கையாக நம்மால் உணரப்படுகிறது. அதன்மீது பகவான் ஸ்ரீசங்கரர் தன் விளக்கத்தை வெளிப்படுத்தியதுதான் **பாம்பு - கயிறு** மற்றும் **திருக் - திருஷ்யம்** போன்ற அத்வைத தரிசனம் ஆகும்.

இதிலே, ஆதி வேதாந்தம் ஒன்றேயான பிரம்மத்தின் துவக்கம் மற்றும் விரிவு போன்ற நிலைகளை இந்த பிரபஞ்சமாக ஏற்றுக் கொண்டது. அதிலே, பிரம்மம் வேறு, பிரபஞ்சம் வேறு என்றாலும், அந்த பிரபஞ்சத்தின் மூலக் காரணம் இந்த பிரம்மம்தான் என்றது.

ஆனால், பகவான் ஸ்ரீசங்கரர் கூறும் அத்வைதமோ பிரம்மம் மட்டுமே உள்ளது என்றும், அதை பிரபஞ்சமாக எண்ணி மயங்குவது ஜீவாத்மாவின் அவித்தை அல்லது அறியாமையினால்தான் என்றும் கூறப்படுகிறது. அதிலே, அந்த அறியாமையை நாம் அறிந்ததுமே உண்மை மாறிவிடுகிறது. ஆக, நாம் அறிந்தது நம்மில்தான் நிலையாக உள்ளது. என்பது இவரது சித்தாந்தம்.

ஆனால், இதற்கு எதிராக நம்மால் இந்த இயற்கையை அறியமுடியாது. இவ்வாறு முற்றிலும் நம் அறிவுக்கு அப்பாற்பட்ட பிரம்மாண்ட வெளியே **சூன்யம்** என்றது பௌத்த வாதம்.

அடுத்து, அறிவகவாதம் கூறுவது, இந்த பிரபஞ்சம் நிலைநிற்பது நாம் அறிந்து, நம் அறிவாக அகத்தில் நிறுத்தியுள்ளவற்றிலேயே என்றது. நாம் அறிவதெல்லாம் நம் அறிவை மட்டுமே என்றது.

புறப்பிரபஞ்சம் உண்டா? என்ற வினாவுக்கு அறிய முடியாது என்பதே இந்த சூனியவாதிகளின் பதில்.

புறப்பிரபஞ்சமென்பது நமது அறிதல் மட்டுமே என்பது, இந்த அறிவகவாதிகளின் பதில்.

ஆனால், இன்னும் சிலரோ இவர்கள் இருவரையும் மறுத்து, இந்த புறவுலகம் என்பது நம் அறிவால் உருவாவதோ, நம் அறிதலோ அல்ல!, அது உண்மையில் உள்ளது என்று வாதிட்டார்கள்.

அது பிரம்மமேதான். ஆனால், அதில் நாம் அறியும் வடிவம், குணம், சாரம் அனைத்துமே நமது மனப்பிரமைகளே. அவைகள் நம் அறியாமையின் பொலிவுகள் என்றனர் இன்னும் சிலர்.

இதிலே, அந்த அறியாமைகள் விலகுகையில் **அறிபவன், அறிபொருள், அறிவு** மூன்றும் ஒன்றான நிலை எஞ்சுகிறது. இதுவே, பகவான் ஸ்ரீசங்கரர் கூறும் **மாயாவாதம்.**

பகவான் ஸ்ரீசங்கரர் பார்வையில் பிரம்மம் மட்டுமே உள்ளது. அது சத்து என்றும், பிரம்மமும், நம் மாயையும்

ஒன்றான வடிவம் அது சத்தும், சித்தும் கலந்தது. அவ்வுலகம் பற்றி நாம் கொள்ளும் பலவகையான கற்பனைகள்தான் **மாயை** என்கின்றார்.

இந்த மாயாவாதத்தின் மூன்று நிலைகளில், பகவான் ஸ்ரீசங்கரரின் **அத்வைதமே** சரியான **மாயாவாதம்** எனப்படுகிறது.

பிற மாயாவாதங்களைப் போலன்றி, நாம் அறிபவை முற்றாகவே பொய்த்தோற்றங்களே என்று வாதிடுவது, அவரது மாயாவாதம்தான் என்பது எல்லோரது கருத்து.

பகவான் ஸ்ரீசங்கரர் தன்னுடைய கருத்துக்களுக்கு உபநிடதங்களை கொண்டு மேற்கோள் காட்டினாலும், மகாவாக்கியங்களை வெகுவாக திரித்து பொருள் கூறியுள்ளார் என்பது மற்றொரு சாரரின் கருத்தாகும்.

மோனியர் வில்லியம்ஸ் [Monier Williams] எழுதிய தன்னுடைய இந்திய ஞானம் [Indian Wisdom] என்ற நூலில் '**இந்திய சிந்தனையில் வேரோடியுள்ள மாயாவாதத்துக்கு உண்மையில் உபநிடதங்களில் ஆதாரம் இல்லை. அது பௌத்த இறக்குமதியே**' என்று கூறுகிறார்.

இந்த மாயாவாதம் பிற்காலத்தில் வந்த பல தத்துவ ஞானியரால் மிகத்தீவிரமாக மறுக்கப்பட்டது.

அதை முற்றாக மறுத்தவர்கள் **பாஸ்கர ஆச்சாரியார், ராமானுஜர், மத்வர்,** மற்றும் **விக்ஞான பிக்ஷ** ஆகியோர்கள் எனலாம்.

சைவ சித்தாந்தமும், பிற சைவ ஞான மரபுகளும் மாயாவாதத்தை ஏற்கவில்லை.

ஆனால், இன்றும் சற்று உருமாறிய நிலைகளில் **மாயாவாதம்** எல்லோரிடத்திலும், மாறுபட்ட சிந்தனைகளாக காணப்படுகிறது.

# பிற்கால மதங்களில் மாயாவாதம்

1] நாம் காணும் இந்த பிரபஞ்சம் உண்மையல்ல, அல்லது நாம் அறியுமளவுக்கு உண்மையல்ல, அல்லது அறிவதற்கு அப்பால்தான் அது உள்ளது.

2] நாம் காணும் இப்பிரபஞ்சம் ஒரு முழுமுதல் சக்தியின் விளையாட்டு [லீலை] அல்லது அதன் வெளிப்பாடு [பிரகாசம்]. அந்த முழுமுதன்மை இந்த பிரபஞ்சத் தோற்றம் மூலம் தன்னை நமக்குக் காட்டுகிறது. நமக்கு தன்னை காட்டும் நோக்குடனேயே இது இவ்வாறு உள்ளது.

3] முக்தி அல்லது விடுதலை பெறும்போது இப்பிரபஞ்சம் திரைவிலகி வேறு ஒன்று தெரியும்.

இதில், மகாகவி சுப்ரமணிய பாரதியார் மாயாவாதத்தை கண்டித்திருக்கிறார். ஆக, அத்வைதம் ஒரு மாயாவாதம்.

ஆனால், மாயாவாதம் என்பது அத்வைதம் உள்ளிட்ட பல சிந்தனைகளை தன்னுள் கொண்ட ஒரு தத்துவநோக்கு.

# மாயையின் இரண்டு தன்மைகள்

ஒன்றேயான ப்ரஹ்மத்தின் வெளிப்பாடான மாயா சக்திகள் ஒன்று **ஆவரணம்.** மற்றொன்று **விக்ஷேபம்** எனப்படுகிறது. இந்த சக்திகள் ப்ரஹ்மத்தின் வெளிப்பாடாக இருந்தாலும், அது ப்ரஹ்மத்தில் இருந்து வேறுபட்டதல்ல என்பதினால், அதை "**மித்யா**" என்று அழைக்கப்படுகிறது.

**மாயை** ஒன்றே எங்கும் வியாபித்துள்ளது. இந்த **மாயை** இரு பெரும் சக்திகளாக வெளிப்பட்ட ஆவரணம் என்பது **மறைக்கும் சக்தி**. விக்ஷேபம் என்பது **தோன்றும் சக்தி** எனப்படுகிறது.

உண்மை சொரூபத்தை அறியவிடாமல் மறைக்கின்ற சக்தியை '**ஆவரணம்**' என்றும், உன்மையற்றதை, உண்மையாகத் தன் மீது ஏற்றி வைத்துப் பார்த்தல் '**விக்ஷேபம்**' என்றும் கூறப்படுகிறது.

**ஆவரணம்** உண்மையை அறிய விடாமல் மறைக்கின்றது. **விக்ஷேபம்** இல்லாத ஒன்றை இருப்பது போன்று காட்டி, அதை நம்ப வைத்து ஏமாற்றுகிறது.

கண்களுக்கு காட்சியாகும் **கானல் நீர்** பார்ப்பதற்கு உண்மை போன்றே இருக்கும், ஆனால் உண்மையில் இல்லாத நீரை இருப்பதாகக் காட்டி நம்மை ஏமாற்றும். ஆக,

உண்மையை அறிய விடாமல் மறைக்கின்ற ஆவரணமும், இல்லாத ஒன்றை இருப்பதாகக் காட்டும் விக்ஷேபமும் ஒன்றேயான **மாயை** ஆகும்.

அதுப்போன்று, இந்த உலகம் விழிப்பு நிலையில் பார்ப்பதற்கு உண்மை போன்று நம் கண்களுக்கு காட்சியாகின்றது. ஆனால், அதே உலகம் ஆழ்ந்த உறக்க நிலையில் இல்லாமல் போகிறது, இருப்பினும், நாம் இந்த உலகம் இருப்பதாக நினைத்துக் கொண்டுதான் தூங்கப் போகிறோம்.

ஆக, நம் அன்றாட நிகழ்வுகளில் உண்டாகின்ற மூன்று அவஸ்தைகளான விழிப்பு, கனவு, ஆழ் உறக்கம் என்ற மூன்றும் **மாயா** என்றே அழைக்கப்படுகிறது.

அதாவது, **ஆவரணம் உள்ளதை மறைப்பது**! **விக்ஷேபம் இல்லாததை தோற்றுவிப்பது**!

இதன் அடிப்படையில், என்றும் உண்மையாக உள்ள ப்ரஹ்மத்தை, தோன்றி மறையும் “**மாயை**” மறைக்கிறது.

அதாவது, இல்லாத உலகம் இருக்கின்ற ப்ரஹ்மத்தை மறைக்கிறது என்கிறது அத்வைத சித்தாந்தம்.

இந்த மாயையைக் கடந்தால், பொய்யான இந்த உலகம் மறைந்து, மெய்யான ப்ரஹ்மத்தின் தரிசனம் கிடைக்கும்.

ஆகவே, நாமும், பிரம்மமும் வேறு, வேறு என்று நினைத்த மாய எண்ணமும் மறைந்து போகும் என்கிறது அத்வைதம்.

சரி!, அந்த மாயையைப்பற்றி புரிந்துகொள்ளலாம்.

எல்லாமே மாயை என்றால், நாம் காண்பது, அனுபவிப்பது எல்லாமே பொய்யா?

மகிழ்ச்சி, துக்கம், வலி, பரவசம், பசி, தூக்கம் எல்லாமே பொய்யா?

காணும் உலகம் பொய்யா?*

உயிரினங்கள் பொய்யா?*

சந்திர சூரியர்கள் பொய்யா?*

ஆம்! என்கிறது **மாயாவாதம்.**

எல்லாமே பொய்தான். அது நமக்குத் தெரியவில்லை என்கிறது.

**எப்படி! எல்லாமே பொய்யாக இருக்க முடியும்?**

உதாரணமாக, நீங்கள் செல்லும் பாதையில் ஒரு பாம்பைப் பார்க்கிறீர்கள். உடனடியாக பயம் உண்டாகி

விடுகிறது. அடுத்த நிமிடமே, அது ஒரு கயிறு என்று தெரிந்து விடுகிறது. அப்போதே, அந்த பயம் நீங்கி, அங்கே இருந்த பாம்பு மறைந்து விடுகிறது அல்லவா?

அதுபோலத்தான் இருப்பது **ப்ரஹ்மம் மட்டும்தான்** என்று உணர்ந்தால், இந்த **உலகம் மறைந்துவிடும்** என்கிறது அத்வைதம்.

அதாவது, ஒரு குடம் இருக்கிறது. அதற்குள்ளும் ஆகாசம் இருக்கிறது. அதற்கு வெளியிலும் ஆகாசம் இருக்கிறது. அந்த குடத்தின் ஓடு உடைந்தால் வெளியில் உள்ள ஆகாசமும் உள்ளே இருக்கும் ஆகாசமும் ஒன்றாகி விடுகின்றன அல்லவா?

அந்த மண் குடத்தின் மேல்ஓடு போன்றதுதான் மாயை. இப்படி ஒரு விளக்கம் தரப்படுகிறது.

அடுத்து, பெரிய பணக்காரர் ஒருவர் தூங்கும்போது பிச்சை எடுப்பது போலக் கனவு காண்கிறார். பசியால் அழுகிறார்.

அவ்வாறே, வேறொருவர் மலையிலிருந்து கீழே விழுவது போன்று கனவு காண்கிறார். கனவு காணும்போது அது நிஜம்போல இருக்கிறது. வேதனை, பயம் என எல்லாமே நிஜமாக இருக்கின்றன. அவருக்கு விழிப்பு வந்த பிறகு, அது பொய் என்று தெரிகிறது. அதுப்போலத்தான் **மாயை** விலகியதும் உண்மை புரிகிறது.

இப்படியும் ஒரு விளக்கம் அளிக்கப்படுகிறது.

அதாவது, அடியாழத்தில் மறைந்திருக்கும் உண்மையை உணர்ந்ததும், மேற்பரப்பில் தோற்றமளிக்கும் உண்மையைப் போன்ற **மாயை** மறைந்து விடுகிறது என்கிறது அத்வைத சித்தாந்தம்.

அதாவது, கயிற்றை பாம்பு என்று நினைத்துக் கொண்டிருக்கின்ற அறியாமை அகன்றால், அது பாம்பு அல்ல கயிறுதான் என்று உணருவதுபோல, **மாயை** என்பதை அறிந்தால் **ப்ரஹ்மமே நித்தியம்,** அதுவே சத்தியம் என்பதையும், அந்த "**ப்ரஹ்மமே நான்**" என்பதையும் உணரலாம் என்பதே **தத்துவ தரிசனம்.**

ஆக, பாம்பாகத் தெரியும் கயிறை உணர அறிவும், விழிப்புணர்வும் அவசியம். அவ்வாறே, இந்த உலகமாகத் தெரியும் ப்ரஹ்மத்தை உணர "**ஞானம்**" அவசியம். அந்த ஞானத்தின் மூலம் நித்தியமான சத்தியத்தை உணரலாம் என்கிறது அத்வைதம்.

சரி!, இந்த **மாயை** எப்படி வந்தது? எப்போது வந்தது? ஏன் வந்தது?

இந்த **மாயை** என்பது பற்றிப் பலரும் பலவிதமாகக் கூறுவதற்குக் காரணம், அவர்கள் எல்லோருமே பெரும்பாலும் எதிர்மறையாகவே பொருள் எடுத்துக் கொள்கின்றனர்.

**மித்யா** அல்லது **மாயை** என்பது அறியாமை என்றும், நிலையாமையை நிலைத்தவை எனக் கொள்ளும் மயக்கம் என்றும், அந்த மாயையிலிருந்து விடுபட்டால்தான் பிரம்மத்தை அறிதல் சாத்தியம் என்றும், மேலும், அந்த **மாயை** என்பதே துறக்கப்பட வேண்டிய ஒன்று என்பது போல, எல்லாமே ஏற்றி எண்ணங்களாக உள்ளன.

இந்த குழப்பம் மற்றும் ஏற்றிவைக்கப்பட்ட எண்ணங்கள் மூலம் இந்த மாயையைக் கண்டு மனம் மயங்குகின்றனர், அத்துடன் அந்த மாயைக் கண்டு அஞ்சுகின்றனர்.

ஆனால், அரிதான உண்மை ஒன்று உண்டு.

அது, அந்த மாயையே ப்ரஹ்மத்தை அறிவதற்கான **திறவுகோல்** என்றால் உங்களால் ஏற்றுக் கொள்ள முடிகிறதா…?

ஆம்!, உண்மையில் மாயையானது, ப்ரஹ்மத்திடமிருந்து பிரிக்க முடியாதது. அது எப்பொழுதும், நீங்காமல் அதனுடன் உள்ளது.

ஆதிசங்கரரின் **கயிறும், பாம்பும்** பற்றிய நியாயம் இதைத்தான் கூறவருகிறது.

நன்கு புரிந்துக் கொள்ளுங்கள் இருளும், ஒளியும் கலந்து இருக்கும் இரண்டுங்கெட்டான் நிலையைத்தான் மாயை என்று கூறப்படுகிறது.

சரியாக எதுவுமே தெரியாமல், பார்க்கின்றவர்களின் பார்வையில் இருமைகள் கொண்ட சூரியன் உதிக்கும் விடியற்காலை அல்லது சூரியன் மறையும் மாலைப் பொழுதுகள் மங்கிய வெளிச்சத்தில் தோற்றப் பிழையை தோற்றுவிக்கும். அதுவே மாயை.

இதைத்தான் மாயையின் இரண்டு சக்திகளாக **ஆவரணம் - விக்ஷேபம்** என்று கூறுகின்றனர்.

ஆனால், இதை எடுத்துக் கூறியவர்கள் ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களில் சிக்கி, **எல்லாம் மாயை** என்று எடுத்துரைக்கின்றனர்.

அதாவது, ஒரு கயிறு பாம்பாகத் தெரியும் வரை, அது பாம்பாகவே உணரப்படுகிறது. அவ்வாறு பாம்பாக உணரும் போது, அந்த கயிறானது உண்மையில் பாம்பாகவே உள்ளது.

அதாவது, அது பாம்பாக உள்ளதிலிருந்து சற்றும் மாறவே இல்லை.

ஆனால், அதன்மீது ஒளிப்பட்டவுடன் அப்படியே தலைகீழாக மாறி, இதுவரை பாம்பாகத் தெரிந்தது, தற்போது கயிறாகத் தெரிகிறது.

அதாவது, இரண்டுமே ஒன்றுதான் என்பதற்கு இதைவிட ஆதாரம் என்ன உள்ளது.

ஆக அந்த பாம்பிற்கு ஆதாரமாக **கயிறு** மட்டுமே அங்கு இருந்தது.

ஆனால், பாம்பு என்பது எப்படி அங்கு வந்தது? அல்லது, பாம்பைப் பற்றி பார்ப்பவனுக்கு எப்படி தெரிந்தது?.

அதாவது, அவன் ஏற்கனவே பாம்பு என்ற ஒன்றினை நேரடியாகப் பார்த்த அனுபவத்தை அடைந்து இருந்ததினால், அந்த பாம்பைப் பற்றிய பயம், அவனுக்கு கயிறு மூலம் பாம்பு என்று உண்டானது.

அதாவது, ஒரே கயிறு பார்க்கின்ற பார்வையாளனின் காட்சிப்பிழையில் உண்டான மாறுபாடுகளினால், பாம்பாகவும், கயிறாகவும் மாறி, மாறிக் காணப்படுகிறது.

அதுப்போன்று, ஒன்றேயாகிய ப்ரஹ்மம் (ஆன்மா) தன்னால் படைக்கப்பட்டவைகளை தனக்கு வேறாகப்பார்ப்பது என்றுமே நிகழாத ஒன்று.

ஆனால், ப்ரஹ்மத்திற்கு வேறாக இந்த உலகம் உண்டாவதற்குக் காரணம், ப்ரஹ்மத்தின் படைப்பாகிய மாயை ஆவரணம், விக்ஷேபம் என்ற இரு மாறுபட்ட சக்திகளால், இருப்பதை இல்லாததாகக் காட்டுகிறது. அல்லது இல்லாததை இருப்பதாகக் காட்டுகிறது.

ஆக, இந்த இரண்டுமே ப்ரஹ்மத்தின் படைப்பு என்பதினால், இது மாயைக்கு வேறானதாக இருக்க முடியாது. அந்த மாயை ப்ரஹ்மத்திற்கு வேறானதாக இருக்க முடியாது.

எனவே, ஒன்றேயான ப்ரஹ்மம் தன்னில் தானாய் தன்னை அறிய, தனக்கு வேறாக சக்தியை வெளிப்படுத்தி, அந்த மாயா சக்தியால் தன்னை அறிகின்றது.

ஒருவன் தன்னை பார்க்க தனக்கு வேறாக ஒரு கண்ணாடியைப் படைத்து, அந்த கண்ணாடின் வழியாகத் தன்னை அறிவது போன்று எனலாம்.

ஆனால், கண்ணாடி அவனால் படைக்கப்பட்டதினால், அது அவனுக்கு வேறாக இருப்பதுப்போன்று காணப்பட்டாலும், அதில் தெரிகின்ற காட்சி அவனைத்தான் காட்டுகிறது எனும் போது, அந்த காட்சியில் வருகின்ற உருவம் அவன் அல்ல என்று கூறமுடியுமா?...

அதுப்போன்றுதான் ஒன்றேயாகிய ப்ரஹ்மம் தன்னில் தானாய் அனைத்தையும் படைத்து தனக்கு தன்னையே அனுபவமாக்குகிறது என்று அறிய வேண்டும்.

உடல் தன்னிடம் உள்ள புலன்களின் வாயிலாக மற்றவைகளைப் பகுத்துப்பார்க்கின்றது.

அதனால், பார்க்கப்படுகின்ற பொருள்கள் அந்த பார்வையாளனுக்கு வேறாக **பார்ப்பவன் - பார்க்கப்படும் பொருள்**

என மாறி, மாறி இருமைகளில் இருப்பதுப் போன்று காணப்படுகிறது.

இங்கே **பார்ப்பவன் - பார்வை - பார்க்கப்படும் பொருள்** எல்லாமே “**பார்ப்பவன்**” என்ற ஒருவன் இருப்பதினால்தான் உண்டாகிறது.

இந்த உண்மையை உணர்ந்துக் கொண்டவர்கள் ப்ரஹ்மத்தை மாயையில் இருந்து பிரிக்க முடியாது என்பதை எளிதாக ஏற்றுக்கொள்வார்கள்.

எப்படி நம்முடைய பார்வையின் தன்மைக்கேற்ப, ஒன்றேயான கயிறு இருமைகளில் வெவ்வேறாகத் தென்படுகிறதோ, அவ்வாறே, அறியாமையினால், ஒன்றேயான ப்ரஹ்மத்திற்கு வேறாக **மாயை** இருமைகளில் அறியப்படுகிறது.

இதுதான் **கயிறு - பாம்பு** நியாயத்தின் உண்மையான உட்பொருளாகும்.

அவ்வாறே, கனவானது கனவு காணும்வரை தத்ரூபமாகவே உள்ளது. விழிப்பு நிலை வருகையில்தான் கனவு என்பது உறைக்கிறது.

அதுவே, ஒருவனுக்கு விழிப்புநிலை உண்டாகாமல், கனவு நீடிக்கும்வரை அது தன்னளவில் நிஜமான ஒன்றாகவே அவனுக்கு உள்ளது.

ஆகவே, இந்த **கனவு, விழிப்பு** என்ற இரண்டுக்கும் இடையில் உள்ள அறியாமையை அறிய வேண்டுமானால், **மாயை** என்பது என்னவென்று அவசியம் அறிந்தாக வேண்டும்.

அதாவது, //***உறைநிலையில் உள்ள பனிக்கட்டியில் மறைந்துள்ள நீரைப்போன்று, ப்ரஹ்மத்திடம் உள்ள சக்தி மாயை**// எனப்படுகிறது.

இதுப்புரியாமல், பலரும் மாயையை ப்ரஹ்மத்திலிருந்து பிரித்துப் பார்ப்பதால்தான், அதை ஒரு வேண்டாத அம்சமாகக் கருதுகின்றனர். அத்துடன் ப்ரஹ்மத்தை காண்பதற்கு தடையாக உள்ளதாக, இந்த '**மாயை**' பற்றி மயக்கம் கொள்கின்றனர்.

மாயையைக்கண்டு மயங்காத பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அதை '**மம மாயா**' என்றும் '**தைவி மாயா**' என்றும் கூறமுடிகிறது. (**மம** என்றால், என்னுடைய என்றும், **தைவி** என்றால், தெய்வீகமான என்றும் பொருள்படும்.)

ஆக, **மாயை** என்பதைக்கண்டு மயங்கவோ, பயப்படவோ, ஒதுக்கவோ வேண்டிய அவசியம் ஒருபொழுதும் இல்லை.

இதன் உண்மைத்தன்மையை உணர்ந்தவர்கள் மட்டுமே, **மாயை-ப்ரஹ்மம்** என்பதை இருமைகளால் பிரித்துப்பார்க்காமல், அனைத்தையும் '**உள்ளது உள்ளபடி**' அப்படியே ஏற்றுக்கொள்ள முடியும்.

இதிலே, "**ப்ரஹ்மம்**" என்பது '**சிவம்**' என்றால், "**மாயை**" என்பது '**சக்தி**' எனப்படுகிறது.

அதாவது, ப்ரஹ்மத்திடமிருந்து வெளிப்பட்ட சக்தியே இந்த **மாயை** என்பதினால், இந்த **சிவமும், சக்தியும்** சேர்ந்ததே **உலகம்** எனப்படுகிறது. அதாவது, ப்ரஹ்மத்திற்கு வேறாக இந்த **மாயை** பிரிக்க முடியாதது எனலாம்.

இதுப்புரியாமல், எல்லோருமே இந்த உலகம் மாயை! எனவே, இது உண்மையல்ல! பொய் என்பது போன்று எடுத்துக் கொள்கிறார்கள். இதைத்தான் **அறியாமை** என்று அறிய வேண்டும்.

இந்த அறியாமையின் காரணமாக, இந்த உலகத்தின்மீது விருப்பு - வெறுப்புகளுக்கு உட்படுகின்றனர்.

***மாயை மனதை மயக்குவது அல்ல! மாறாக, நம் சுய அறிவை நமக்குக் காட்டுவது!**

ஆக, **மாயை** என ஒன்று இருப்பதால்தான் மொத்த பிரபஞ்சமும் இருக்கிறது. அதன் இயக்கம் இருக்கிறது. அந்த இயக்கம் காரணமாக, இயற்கையின் மகத்தான சக்திகளை அனுபவிக்க முடிகிறது.

எனவே, **மாயை** என்பது **உறை நிலையில் உள்ள ப்ரஹ்மம்** என்பதை பகவான் ஸ்ரீகிருஷ்ணர் கூறுகிறார்.

இதில் உள்ள ஒரு நுட்பமான விஷயம், ப்ரஹ்மம் பனிக்கட்டி போன்று **உறைநிலையில் உள்ளபோது அசைவற்றது**. அதுவே, உருகி நீராக **இயக்க நிலைக்கு வரும்போது, அசைகின்றது.** அதாவது, ஒன்றேயான ப்ரஹ்மம் சக்தியாக இயங்கி பலவற்றையும் தோற்றுவிக்கிறது!

இறைச்சக்தி தன்னை பகிரங்கமாக வெளிப்படுதிக் கொள்ளாமல், மாயையான பிரபஞ்சத் தோறறங்களின் மூலம் தன் இருப்பை சூசகமாக உணர்த்துகிறது.

இதைப் புரிந்து கொண்டதால்தான் ஞானியர்கள் ஜடப் பொருள்கள் உள்ளிட்ட சகலத்திலும், அந்த இறை சக்தியைக் காண்கின்றனர். இதில், '**நான்**' என்ற சுயமும் அவர்களுக்குள் அடக்கம்.

ஆக, அந்த அறிவை அடைந்தவர்கள் மட்டுமே, **மாயை** என்று எதையும் தூஷிப்பதில்லை. ஆக, **அத்வைதம், த்வைதம்** இரண்டுமே இதில்தான் வந்து ஒடுங்குகின்றன.

எனவே, "**நானே கடவுள்**" என்பது அத்வைதம் அல்ல.


"மாயையின் நிலையில் **சகலத்திலும் பிரதிபலிக்கும்** ஒன்றேயான ப்ரஹ்மம், என்னுள்ளும் பிரதிபலிக்கிறது என்பதை உணர்தலே உண்மையான அத்வைதம்."

ஓம் தத் ஸத்

# பார்ப்பவன் - பார்க்கப்படும் அறிவு !

## (திருக் - திருஷ்ய விவேகம்)

ப்ரக்ஞன்



இருளும், ஒளியும் கலந்து, சரியாக எதுவுமே தெரியாமல், பார்க்கின்றவர்களின் பார்வையில் இருமைகள் கொண்ட சூரியன் உதிக்கும் விடியற்காலை அல்லது சூரியன் மறையும் மாலைப் பொழுதுகளாகிய இரண்டுங்கெட்டான் மங்கிய வெளிச்சத்தில் தோற்றப்பிழையை தோற்றுவிப்பது எதுவோ, அதுவே மாயை.

இதைத்தான் மாயையின் இரண்டு சக்திகளாக **ஆவரணம் - விக்ஷேபம்** என்று கூறப்படுகிறது.